## வாக்குமூலம்

## குற்றவியல் நடுவர் நீதிமன்றம் , தென்காசி .

## வழக்கு எண் : CC.No.193/2024

## வழக்கு சாட்சி PW-4

| பெயர் | சுப்புராஜ் | தாலுகா | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | | வயது | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் தாமஸ் டேனியல் மற்றும் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி. மீராள் பானு ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்றாக தெரியும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.02.2015 ம் தேதி 09.30 மணிக்கு மேற்படி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சிலம்பரசன் என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 42/2015 இதசபிரிவுகள் 294(b), 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் வாக்குமூலம் அசாஆ 2 ஆகவும் மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 09.02.2015 ம் தேதி 12.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராமன் மற்றும் காளிதாஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி**

**வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சிலம்பரசன், பேச்சியம்மாள், மாரியப்பன், சேகர், பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் தாமஸ் டேனியல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 09.02.2015 ம் தேதி 16.30 மணிக்கு புலவனூரில்வைத்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர் மூர்த்தி ராஜ் என்பவரை விசாரித்து காயசான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை 14.05.2015 ல் அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னாலும், நான் சொன்னபடி சொன்னதுபோல் எதிரிகள் கைதுசெய்யபடவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் , தென்காசி .

வழக்கு எண் : CC.No.193/2024

வழக்கு சாட்சி PW-3

| பெயர் | பேச்சியம்மாள் | தாலுகா | தென்காசி |
|---|---|---|---|
| கணவர் பெயர் | சிலம்பரசன் | தொழில் | பீடி சுற்றும் வேலை |
| கிராமம் | செட்டியூர் | வயது | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது செட்டியூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர். எதிரி கார்த்திக் என்பவரை தெரியும். அவர் இறந்து விட்டார். அசா.1 சிலம்பரசன் என் கணவர்.அசா.2 சேகர் என் மாமா, சாட்சி மாரியப்பன் என்பவரை தெரியும். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.02.2015 ம் தேதியன்று 11.00 மணியளவில் எதிரிகள் அசா.1 ஐ பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல, என்னை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. அசா.1 ஐ அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அசா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரியுடன் அசா.1 சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi